## பொதுக்கட்டுரை

- முன்னுரை - பொருளுரை - முடிவுரை ஆகியவற்றைக் கொண்டு விளங்க வேண்டும்.
- முன்னுரையும் முடிவுரையும் ஒவ்வொரு பத்திக்குள் அமைய வேண்டும்.
- முன்னுரையானது, எழுதப் போகும் கருத்தை வகுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும்.
- முடிவுரையானது சொல்லப்பட்ட கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதாக அமைய வேண்டும்.
- ஒரு கட்டுரையில் முன்னுரையையும் முடிவுரையையுமே கட்டுரையின் சிறப்புத் தன்மையை விளக்கும்.
- பொருளுரையானது, எடுத்துக்கொண்ட கருத்தைப் பல வழிகளில் விளக்கிக் கூறும் பகுதி ஆகும்.
- ஆதலின், எடுத்துக்கொள்ளும் பொருளுக்கு ஏற்ப, உள் தலைப்புகள் பலவற்றைக் கொண்டதாகப் பொருளுரை விளங்க வேண்டும்.
- கட்டுரையானது, சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நன்மொழி புணர்த்தல் முதலான அழகுகளைப் பெற்றிருக்க வேண்டும்.
- கூறியது கூறல், மாறுகொளக் கூறல், மற்றொன்று விரித்தல் முதலான குற்றங்கள் இல்லாமல் எழுதப்பட வேண்டும்.
- இனி, கட்டுரை எழுதுவோர் கருத்திற்கொள்ள வேண்டிய சில பொதுவிதிகளைக் காண்போம்.

1. செய்திகளைத் திரட்டுதல்
2. முறைப்படுத்துதல்
3. தலைப்புக் கொடுத்தலும் பத்தி அமைத்தலும்
4. மேற்கோள்கள் - பழமொழிகள் திரட்டுதல்
5. பல்வகை வாக்கியங்களில் எழுதுதல்
6. நடை அழகு
7. நிறுத்தக் குறியீடுகள் பயன்படுத்தி எழுதுதல்
8. நல்ல கருத்துகளை எடுத்தாளும் திறன்
9. மீள் பார்வை செய்தல்
10. நல்ல கையெழுத்தில் எழுதுதல்.

www.kalatamil.com

# கட்டுரை அமைப்பு முறை

**STEP : 1 தலைப்பு**

**STEP : 2 குறிப்புச்சட்டகம்**

**STEP : 3 முன்னுரை (மேற்கோளுடன் ஒரு பத்தி) ஆறு வரிகள்**

**STEP : 4 பொருளுரை**

**(உட்தலைப்புகள் & மேற்கோளுடன்) ஏதேனும்**

நான்கு அல்லது ஐந்து உட்தலைப்புகளுடன்)

தலைப்பு: 1

கருத்து,மேற்கோள்

தலைப்பு: 2

கருத்து,மேற்கோள்

தலைப்பு: 2

கருத்து,மேற்கோள்

தலைப்பு: 2

கருத்து,மேற்கோள்

STEP : 5 முடிவுரை (மேற்கோளுடன் ஒரு பத்தி) ஆறு வரிகள்.

www.kalatamil.com

இன்று நாம் பார்க்கும் பொதுக்கட்டுரைகள்

- சிறுசேமிப்பு
- அன்றாட வாழ்வில் அறிவியல்
- மரங்களும் அதன் பயன்களும்
- காடுகளும் அதன் பயன்களும்
- சுற்றுச்சூழல்
- ஒழுக்கம்
- முயற்சி

கட்டுரை - 1

சிறு சேமிப்பு

## குறிப்புச் சட்டம்

**முன்னுரை**

**சிறுதுளி பெருவெள்ளம்**

**சிக்கன வாழ்வு**

**பணத்தைப் பற்றிய பழமொழிகள்**

**சேமிக்கும் வழிமுறைகள்**

**சேமிப்பின் பயன்கள்**

**முடிவுரை :**

**முன்னுரை :**

"சிக்கனம் வீட்டைக்காக்கும்,சேமிப்பு நாட்டைக் காக்கும்". "சிறுகக் கட்டி பெருக வாழ்" என்பது முது மொழி. "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று வள்ளுவர் கூறியுள்ளார். அத்தகுசிறப்பு வாய்ந்த சிக்கனத்தைப் பற்றியும் அதனைச் சேமிக்கும் வழிமுறைகள் பற்றியும் இக் கட்டுரையில் காண்போம்.

**சிறுதுளி பெறு வெள்ளம் :**

வள்ளுவர் கூறும் அறம், பொருள், இன்பம் என்கின்ற மூன்றில் பொருளை மட்டும் பெற்றுவிட்டால் அறமும், இன்பமும் தானே வந்துவிடும். தண்ணீரை அணைகள், குளங்கள், ஏரிகள் ஆகியவற்றில் தேக்கிவைத்துத் தேவைக்கேற்பப் பயன்படுத்துவது போல பணத்தையும் சிறுக சிறுக சேமித்துப் பழகினால் அது நம் எதிர் கால தேவைக்குப் பயன்படும்.

**சிக்கன வாழ்வு :**

காந்தியடிகள் பல்துலக்கும் வேப்பங்குச்சியைக் கூட சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்றார். "தேவைக்கு மேல் பொருள் வைத்திருப்பவன் திருடன் ஆவான்" என்றார் காமராசர். புலியைப் பார்த்து பூனைச் சூடு போட்டுக் கொண்டதைப் போல செல்வர்களைப் பார்த்து அளவுக்கு அதிகமாக செலவு செய்தல் கூடாது. வருவாய்க்கு ஏற்பச் செலவு செய்தல் வேண்டும். தானும் உண்ணாமல் பிறரையும் உண்ணவிடாமல் இருத்தலே கஞ்சத்தனம். சிக்கனம் கஞ்சத்தனம் அன்று.

**பணத்தைப் பற்றிய பழமொழிகள் :**

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை","பணம் பத்தும் செய்யும்", "பணம் இல்லாதவன் பிணம்", "பணம் பந்தியிலே"- என்பன பணத்தின் முக்கியத்துவத்தைத் தெரிவிக்கும் பழமொழிகள்.

**சேமிக்கும் வழிகள் :**

சேமிப்பதற்குப் பல வழிகள் உள்ளன. பள்ளிகளில் சேமித்துப் பழக வேண்டும் என்பதற்காக **"சஞ்சாயிகா"** எனும் திட்டத்தை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. நாம் அரசு சிறு சேமிப்பு நிலையங்கள், அரசு வங்கிகள், அஞ்சலகங்கள், சேமிப்புஆவணங்கள் ஆகியவற்றில் பணத்தைச் சேமிக்கலாம்.

**சேமிப்பின் பயன்கள் ;**

நாம் சேமிக்கும். பணம் நமக்கு வட்டியுடன் கிடைக்கிறது. நாட்டு நலத்திட்டங்களுக்கும் பயன்படுகிறது நாமும் நம்முடைய தேவைக்கும் பயன் படுத்திக் கொள்ளலாம். நோய், விபத்து, திருமணம், உயர் கல்வி போன்றத் தேவைக்கும் பயன்படுகிறது.

**முடிவுரை :**

சிக்கனப் பண்பு சிறந்த பண்புகளுள் ஒன்று. சேமிப்பு நம் மனதைத் தூய்மை படுத்தும். பிற்கால வாழ்வை ஒளி மயமாக்கும். சேமிப்பு வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லது. எனவே நாம் அனைவரும் சிக்கனத்தைப் பின்பற்றிச் சேமிக்க பழகுவோம்.

www.kalatamil.c

# கட்டுரை - 2

# அன்றாட வாழ்வில் அறிவியல்

## குறிப்புச் சட்டம்

முன்னுரை

நீர், உணவு,உடை, உறையுள்

மின்சாதனங்கள்

மருந்து

தோட்டக்கலை,உழவு

தொழில், இசை, இசைக்கருவி

தகவல் அறிய

ஓய்வு

சுற்றுச்சூழல்

போக்கு வரத்து சாதனங்கள்:-

முடிவுரை

www.ka...com

**முன்னுரை:-**

**"இயற்கையின் படைப்பினை எளிதாக்க இயன்று இருப்பதே அன்றாட அறிவியல்"**

எழுவது முதல் விழுவது வரை அன்றாடம் நம் செயல்பாடுகளில் அறிவியலின் பயன்பாடு நீக்கமற நிறைந்திருப்பதில் எட்டுணையும் ஐயமில்லை. விழித்தவுடனேயே தேவைப்படும் நீர் முதல் உறக்கத்தின் போது தேவைப்படும் கொசு, மூட்டைப்பூச்சி நீக்கிவரை விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் இல்லாமல் எந்த நாளும் கழிவதில்லை. இவற்றின் எண்ணிக்கை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக பல்கிக் கொண்டே செல்கிறது. அவற்றை ஒவ்வொன்றாக இப்பொழுது விரிவாகக் காண்போம்.

**நீர்:-**

**"நீரின்றி அமையாது உலகு" முதுமொழி**
**"அறிவியலின்றி அமையாது உலகு" புதுமொழி**

வெளியில் செல்வது, பல் துலக்குவது, முகம் கழுவுவது,நீராடுவது, துணி துவைப்பது, பாத்திரங்கள் துலக்குவது, அரைப்பது, கரைப்பது, சமைப்பது இப்படி தொடர் பணிகள் அத்தனைக்கும் நீர், குளிர்நீர், வெந்நீர் போன்றவைகள் தேவைப்படுவதால் அவற்றிற்குரிய விஞ்ஞான சாதனங்களின் தேவையும் அவற்றின் பயன்பாடும், அவை குறையுடையவையாயின் அவற்றை செப்பம் செய்யும் முறைகளும் நாம் அறிந்திருப்பது இன்றியமையாததாகும்.

**உண்டி:-**

சிற்றுண்டி, பேருண்டி எதுவாயினும் அவை கலப்புணவாக, சரிவிகித உணவாக, ஊட்டம் மிக்கதாக, உண்ணத்தக்கவையாக, உடலுக்கு ஊறு விளைவிக்காததாக, காலத்தால் அளவாக பசித்து புசிப்பதாக, வலிமை சேர்ப்பதாக, நோய்களுக்கு காரணம் இல்லாததாக, வயதுக்கும், தட்பவெப்ப நிலைக்கும் தக்கதாக அமைய அறிவியல் அறிவு இன்றியமையாததாக அமைகின்றது.

**உடை:-**

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**

மானங்காப்பதாக, தளர்வோ, இருக்கமோ, மிகுதியாக இல்லாததாக, தட்பவெப்ப நிலைகளால் குளிர் நடுக்கமோ,

வெப்ப வியர்வை மிகையோ உடலில் தோன்றா வண்ணம் அமையும் உடுப்புக்கள், எளிதில் தீப்பிடிக்காத, சீக்கிரம் உலர்ந்து விடுவதாக அந்தந்த சமயங்களுக்கு ஏற்ற உடுப்புகள், பருத்தி பட்டு, கம்பளி போன்ற வகைப்பாடுகள் அறிந்து உடுத்த அறிவியல் மிகப் பயன்பாடு மிக்கதாகும்.

**உறையுள்: -**

கூரையோ தளமோ சிறு பெரு சந்துகல் அற்றதாக கசிவு இல்லாததாக ஓதம் அற்றதாக இதே குறைகள் சுவர்களில், தரைகளில் இல்லாததாக, பலகணிகள், கதவுகள் தேவைப்படும்போது திறக்கவும், தேவை இல்லாத போது நன்கு மூடவும் தக்கவையாக, ஊதக்காற்று உள்வராததாக, கொசு, பூச்சிகள் போன்றவை வீட்டிற்குள் நுழையாதபடி பாதுகாப்பானதாக அமைய, வந்துவிட்டால் நீக்குவதாக இவற்றை அறிந்து செயல்பட அறிவியல் பெரிதும் தேவைப்படுகிறது.

**மின் சாதனங்கள்:-**

தூசு நீக்கி, ஈரம் அகற்றி, ஒட்டடை போக்கி போன்றவைகளைப் பயன்படுத்தாத இல்லங்களே இல்லை என்ற அளவுக்கு அனைத்து மாதற்கும், பணியாட்களுக்கும் தேவையானதாகவும், அவை குறையுடைத்தாயின் அவற்றை செம்மையாகச் செய்யும் முறைகள் அறிதல் இவை அறிவியல் அன்றாடம் பயன்படுத்தலின் நிலையைப் பெரிதும் உணர்த்தும்.

**மருந்து:-**

**‘’வருமுன் காக்க; வாழ்வியலை நோக்க அறிவியலை நாடுவோம்”**

நோய் வருமுன் காக்கவும், வந்த பின் போக்கவும், இன்று வீரிய மருந்துகள், பக்க விளைவுகள் ஏற்படுத்தாவண்ணம் புதிது புதிதாய் தேவைப்படுகின்றன.புதிய நோய்கள் பல்கியதாய்ப் படை எடுக்கின்றன.மருத்துவர் கற்காப் பிணிகள் பற்பல தோன்றி அவர்களையே அச்சுறுத்துகின்றன. மனிதனின் புறத்தும் அகத்தும் உள்ள உறுப்புகட்கு தனித்தனியே நுணுகிக் கற்ற வைத்தியர்கள் இன்று பற்பலர். பிறப்பு விகிதத்தைக் கட்டுக்குள் வைத்து, இறப்பு விகிதத்தை நன்று குறைத்திட பலரும் முயற்சித்து வருகின்றனர். அவர்களின் அறிவுரைகளை சமுதாயம்  முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

**தோட்டக்கலை, உழவு:-**

வித்து முளைக்க, துளிர் விட,பூக்க,காய்க்க, பழுக்க,பூச்சி, புழு அரிப்பு அணுகாது காக்க அறிவியல் அன்றாட வாழ்வில் பெரிதும் தேவையாகிறது. ஊட்டமுள்ள கீரைகள், காய்கள், பழங்கள், காய்கறிகள் நாம் பெற்றுப் பயன்பெற விஞ்ஞானம் தேவையாகிறது.

**<u>தொழில்:-</u>**

எந்தத் தொழிலானாலும் அதைச் சார்ந்த தொழிற்சாலைக்கு இயந்திரங்கள் தேவைக்கு அறிவியல் துணை நிற்க வேண்டும். திறன் மிக பொருள்கள் உற்பத்தி பெருக, குறுகிய கால்ம் குறைந்த செலவில் தரமான கண்டு முதல் கண்டு பொருளாதார வளர்ச்சி பெற அறிவியலாலர்களின் நுண்ணறிவு, தொடர்முயற்சி, புதிய கண்டுபிடிப்புகளின் அணிவகுப்பு இவற்றிற்கு விஞ்ஞானத்தின் பயனபாடு தொடர்ச்சியான, இன்றியமையாத தேவையாக அமைகின்றது.

**<u>இசை, இசைக்கருவி:-</u>**

கவலையை மறக்க, மகிழ்ச்சி அடைய இசை, மெல்லிசை,இன்னிசை, கருவி இசை, பஜனை, கர்நாடக இசை, காலட்சேபம், ஹரிகதை, வில்லிசை, கீழ்நாட்டு மேல்நாட்டு இசைக்கருவிகள், இசைத்தட்டு, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம்,நாட்டியம், நுண்கலைகள், சின்னத்திரை, நாடகம் இவற்றிற்கு தேவைப்படும் கருவிகள் காண விஞ்ஞானம் தேவை.

**<u>தகவல் அறிய:-</u>**

**<u>“தகவலின் தகைமைப் பண்பே அறிவியல்”</u>**

செல்பேசி, தொலைபேசி, கணினி,மடிக்கணினி, மின்னஞ்சல், வலைப்பூ, தினசரிகள்,வாரம்
மும்முறை,இருமுறை,ஒருமுறை, மாதம்
மும்முறை,இருமுறை,ஒருமுறை, காலாண்டு, அரையாண்டு இதழ்கள், ஆண்டுமலர்கள், சிறப்பு நாட்கட்கான மலர்கள் இவைகளை நாம் பெற்றுத் துய்க்க பல கருவிகள், இயந்திரங்கள் தேவைக்கு அறிவியலை நாம் துணை கொள்ள வேண்டும்.

**<u>ஓய்வு:-</u>**

ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் கழித்து மன நிறைவு பெற, மகிழ மகிழ்வூட்ட, பலருடன் கலந்து அனுபவிக்க, மழலைகளோ, மூத்து முதிர்ந்தோரோ, ஆடவரோ, மாதரோ எத்திறத்தார் என்றாலும் ஒளிர்வனவும், வெளிச்சம்

தருவனவும், புழுக்கம் போக்குபவையும் அறிவியலின் கொடைகளே!

**<u>சுற்றுச் சூழல்:-</u>**

**<u>“சுத்தம் சோறுபோட சுலபமாய் வழிகாட்டுவது அன்றாட அறிவியல்”</u>**

சுற்றுச் சூழலின் தட்ப வெப்பத்தை சமப்படுத்தத் தேவையான இயந்திரங்கள் இன்றியமையாதவை ஆகின்றன. அவற்றைப் பெற அறிவியல் பெரிதும் தேவையாகிறது. நம்முடைய தேவைக்கு வசதிக்கு தேவைகள் பற்பல. இவை இன்றைய நவீன சூழலில் பெரிதும் வேண்டப்படுகின்றன. அறிவியலின் கொடைகளாலேயே இவை ஈடுகட்டப் படுகின்றன.

**<u>போக்கு வரத்து சாதனங்கள்:-</u>**

பூமியில் பாலையில் கடற்கரையில் நீர் மீது நீருள்ளே,வானில், மலைமீது அடர்காட்டில், நிலவில் செவ்வாயில் என்று மக்கள் பயணிக்க இருப்புப்பாதை ஊர்திகள், அதிவிரைவு மெட்ரோ, மோனோ தொடர் ஊர்திகள் இப்படி யாவினுக்கும் அறிவியலின் பயன்பாடு அன்றாடம் தேவைப்படுகிறது.

**<u>முடிவுரை:-</u>**

**“அறிவியலை அறவுணர்வாய்ப் போற்றுவோம்**
**ஆளும் தமிழை அதனுள் நாட்டுவோம்”**

இதுபோன்று அன்றாட வாழ்வில் அறிவியலின் பங்கு மகத்தானது . அறிவியலின் வளர்ச்சிகள் பற்பல உள்ளன.

இத்தகைய அறிவியலை ஆக்கத்திற்குப் பயன்படுத்தி அழிவின்றி அழகான பாரத்தைப் படைக்கவும் ஆளும் தமிழைப் போற்றவும் அறிவியலின் வளர்ச்சி நன்மைக்குப் பயன்படவும் நம்மை நாமே நாம் புதுப்பிப்போம்.

## கட்டுரை - 3

## மரங்களும் அவற்றின் பயன்களும்

## குறிப்புச் சட்டகம்

முன்னுரை:
**மரத்தின் அவசியம்:**
**மரங்கள் ஆக்ஸிஜன் தொழிற்சாலை’**
**மரங்களினால் கிடைக்கும் நன்மைகள்** :
**அன்றும் இன்றும்:**
**கரியமிலவாயு:**
**மனம் இருந்தால்**
**முடிவுரை**

com

முன்னுரை:
**“மரம் வளர்ப்போம், நலம் பெறுவோம்”** என்பது இந்நாட்டின் இன்றைய தேவைகளுள் ஒன்றாகும். ஒரு ஆய்வுக் கட்டுரை சொல்கிறது இப்படியே இன்னும் பத்து ஆண்டுகள் போனால் தமிழகமே பாலைவனம் ஆகிவிடுமாம். இதனைத் தடுக்கத் தான் பல அமைப்புகள் ஆங்காங்கு மரம் வளர்க்க ஏற்பாடு செய்கின்றன. இலட்சக்கணக்கான மரக்கன்றுகளை இலவசமாகக் கொடுத்து மரங்கள் வளர்க்க ஆவன செய்கின்றன.இதைப்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**மரத்தின் அவசியம்:**
**“வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்”**
என்பது அன்றைய வாசகம், ஆளுக்கொரு மரம் வளர்க்க வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. மரங்கள் இயற்கையின் கொடை. இயற்கை அன்னையின் மடியில் மலர்ந்த முதல் குழந்தை தாவரம் தானே! அவற்றை நாம் இல்லாமல் செய்யலாமா? அப்படிச் செய்தால் நன்றி கெட்டவர்கள் ஆகிவிட மாட்டோமா? வேண்டாம், நாம் நமக்காக மட்டும் சிந்திப்பதை நிறுத்திவிட்டு உலக நலனையும், எதிர்காலச் சந்ததிகளின் தேவையையும் சேர்த்து சிந்திக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.இதனைத்தான் தொலைநோக்குப் பார்வை என்றும் பொது நல சிந்தனை என்றும் கூறுகின்றனர்.
சுயநலத்தின் பிடியில் சிக்கிய மானிட சமுதாயம் இயற்கையை அழித்து, மரங்களை வெட்டி, காடுகளைக் குறைத்து தன் தலையில் தானே தீ வைத்துக் கொள்கிறது. இவ்வறிவற்றச் செயலைத் தடுக்க வேண்டும்.
**மரங்கள் ஆக்ஸிஜன் தொழிற்சாலை’:**
தொழில் வளர்ச்சியினாலும், பல மின் சாதனங்களைப் பயன் படுத்துவதனாலும் மாசு நிறைந்த இச்சூழலினைத் தூய்மையாக்குபவை மரங்களே! ‘**மரங்கள் ஆக்ஸிஜன் தொழிற்சாலை**’ என்ற வாசகம் நாம் அறிந்ததே அல்லவா! ஆம், மரங்கள் காற்றினை தூய்மை செய்கின்றன, மேலும் நிழலைத் தருகின்றன. ‘**நிழலின் அருமை வெயிலில் தெரியும்**’ என்பது பொன்மொழி. வெப்பம் அதிகமாகக் காணப்படக் காரணம் என்ன? நாம் மரங்களை அழித்ததும், அதனால் ஏற்பட்ட நிழலின்மையுமே காரணமாகும்.
எனவே மரங்களை வளர்க்க வேண்டும்.
**மரங்களினால் கிடைக்கும் நன்மைகள்** :
மரங்கள் பறவைகள் மற்றும் விலங்குகளின் புகலிடமாய் விளங்குகின்றன. மரங்கள் மண் அரிப்பைத் தடுக்கின்றன. நிலத்தடி நீர் அமைய

உதவுகின்றன. நீர் ஆவியாகி மேகமாகி மழையாகப் பெய்ய பெரிதும் துணை செய்பவை மரங்களே!
மரங்கள் நமக்கு பூ, காய், கனி, கீரை போன்ற உணவு வகைகளைத் தருகின்றன. அதுமட்டுமா சிறந்த மருந்துகளையும் உருவாக்க உதவுகின்றன. மேலும் கப்பல் கட்டுவதற்கும், மரவேலைப்பாடு நிறைந்த பெரிய பொருட்கள் முதல் தீக்குச்சி, தீப்பெட்டி போன்ற சிறிய பொருட்கள் வரை பல வகையான பொருள்களைத் தயாரிக்கவும் உதவுகின்றன.
இவ்வாறு பல வகையில் உதவும் மரங்களை நாம் வளர்க்க வேண்டும். நிறைய மரங்களை வளர்த்து காடுகளை உருவாக்க வேண்டும்.. இவை நம் நாட்டின் செல்வங்கள்.

**அன்றும் இன்றும்:**

அக்காலத்தில் "**தாத்தா மரம் நட்டால் பேரன் பயனடைவான்**".
இக்காலத்தில் மரத்தினை வைத்தவனே பயனையும் துய்க்க ஆசைப்படுகிறான். இதுதான் இன்றைய நிலை. விஞ்ஞானத்தினால் முடியாதது என்ன? செயற்கை உரங்களைச் சேர்த்து உடன் பயனெய்த வழிவகை செய்கிறோம். ஆனால் அதன் பயனும் நமக்கு குறைந்த அளவிலேயே நன்மை தருகின்றது என்பது வெள்ளிடை மலை அல்லவா? ஏன் இந்த அவசர கதி? மனிதனின் பொறுமை என்னவாயிற்று? நிதானம் எங்கே போயிற்று? நிதானம் பிரதானம் அல்லவா! எனவே எல்லோரும் இதை நினைவில் கொள்ளவேண்டும்.
இயற்கையின் வழியில் செல்வோம்! மரங்களையும், பயனுள்ள செடி, கொடிகளையும் வளர்ப்போம்! பயன் பெறுவோம்! பசுமை பாரதத்தை உருவாக்குவோம்!!

**கரியமிலவாயு:**

--------------------

பருவநிலை மாற்றத்தை தடுக்க 700 கோடி மரங்கள்: ஐ.நா. திட்டம் :
புவி வெப்பமடைவதால் ஏற்பட்டு வரும் பருவநிலை மாற்றத்தை தடுக்கும் நடவடிக்கையின் முதற்கட்டமாக உலகம் முழுவதும் 300 கோடி மரங்களை ஐ.நா நடவு செய்துள்ளது. இந்நடவடிக்கையில் மொத்தம் 700 கோடி மரங்களை நடவு செய்ய முடிவு செய்துள்ளதாக ஐ.நா. செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.
கரியமில வாயுவை உறிஞ்சும் தன்மை மரங்களுக்கும் காடுகளுக்கும் மட்டுமே உண்டு. மாறாக காடுகள் அழிக்கப்படுவதனால் மனிதனால் உருவாக்கப்படும் கரியமில வாயு மொத்த கரியமில வாயு உற்பத்தியில் 20% பங்களிப்பு செய்வதாக புள்ளிவிவரம் கூறுகிறது.
ஐக்கிய நாடுகள் (ஐ.நா) சுற்றுச்சூழல் திட்டம், உலக வேளாண் காடுகள் மையம் ஆகிய இரண்டு அமைப்புகள் சார்பில் கடந்த 2006இல் மரங்கள் நடவு செய்யும் நடவடிக்கை துவக்கப்பட்டது.
இந்த மரங்கள் நடும் திட்டத்தில் தற்போது எத்தியோப்பியா 72.5 கோடி மரங்களை நடவு செய்து முதலிடத்திலும், துருக்கி 70 கோடி மரங்களை நடவு செய்து 2வது இடத்திலும் முன்னிலை வகிக்கின்றன.
இப்பட்டியலில் மெக்சிகோ (47,24,04,266 மரங்கள்) 3வது இடத்திலும், கென்யா (13,98,93,668 மரங்கள்) 4வது இடத்திலும், 13,74,76,771 மரங்களை நட்டு கியூபா 5வது இடத்திலும் உள்ளன.

**மனம் இருந்தால்:**

--------------------------

செடிகள் வளர்ப்பதற்கு பெரிய இடம் தேவையில்லை.உபயோகமற்ற சின்னச்சின்ன பாத்திரங்களில் செடி வளர்க்க மன அழுத்தம் மறையும்.நம் மனது எப்போதும் ஈரமாக,கோபமற்று குளுமையாக இருக்கும்.அதோடு நம்மால் ஒரு காட்டை உருவாக்க முடியாது.குறைந்தது ஒரு மரம்

கண்டிப்பாக வளர்க்க முடியும்.அப்படி வளர்ப்பதால் நம் வீட்டிற்குத்தேவையான நிழல்,குளுமை கிடைப்பதோடு,ஆரோக்கியத்திற்கும் நல்லது.கொஞ்சம் நேசம்,கொஞ்சம் மெனக்கெடல்,கொஞ்சம் நேரம் ஒதுக்கினால் போதும், எல்லோரும் பசுமையைப் பயிரிடலாம்.உடலுக்கும் பயிற்சி.அழகுக்கு அழகு.குழந்தைகளுக்கும் தொலைக்காட்சியிலிருந்து விடுதலை.. மனமிருந்தால் மார்க்கமுண்டு.உபயோகித்துத் தூக்கி எறியும் பெரிய அளவு கோப்பைகளில்,குளிர்பானப்பாட்டில்களில்,எண்ணெய்க் கொள்கலன் களில் தற்போது செடி வளர்க்கிறார்கள்.உங்களின் சாளரங்களும் பசுமையால் நிறைய செடி வளருங்கள்.குருவிகள்,காக்கைகளையும் நண்பர்களாக்க வேண்டுமா? மரம் வளருங்கள்.

**முடிவுரை:**

1990ம் வருடம் கிட்டத்தட்ட 80 மில்லியன் ஹெக்டேர் நிலப்பகுதி, 20 வருடத்தில் 130 மில்லியன் ஹெக்டேர் நிலப்பகுதியாகிவிட்டது.காடுகளை அழித்து வெற்று நிலங்களை அதிகமாக்கி விட்டோம்.காடுகளை அழித்தலாலும்,தங்கம்,கனிமம்,நிலக்கரிச்சுரங்கம் தோண்டுவதாலும்,மற்றும் முறையற்ற வேளாண்மையாலும் தான் வெற்று நிலம் பெருகிவிட்டது என்கிறார்கள்.நண்பர்களே! பூமியை அகழ்பவர்கள் அகழ்ந்து காயப்படுத்தட்டும். அவர்களைத் திருத்த நாம் யார்? ஆனால் நாம் மரம் வளர்ப்போம்.நமது ஆரோக்கியம் காப்போம்.

## கட்டுரை - 4

## காடுகளும் அதன் பயன்களும்

### குறிப்புச் சட்டம்

**முன்னுரை**
**காடின்றி எதுவுமில்லை**
**அன்றும் என்றும்**
**காடுகள் தரும் பொருள்கள்**
**காடுகள் தரும் பயன்**
**காடுகளை அழித்ததால்**
**காடுகளைப் பாதுகாக்க**
**மேலை நாடுகளில்**
**முடிவுரை**

il.com

**முன்னுரை:**
ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் வனவளம் மிகவும் முக்கியமானதாகும். மரங்கள் நம் வாழ்வோடும் மதத்தோடும், கலாச்சாரத்தோடும் இணைந்துள்ளன. காங்கோ மற்றும் அமேசான் போன்ற வெப்ப மண்டலக் காடுகளில் மழை அதிகமாகப் பெய்யக் காரணம் அங்கு மரங்கள் நிறைந்திருப்பது தான். இன்று பெருமளவில் வனங்கள் அழிக்கப்பட்டு விளைநிலங்களாக மாற்றப்பட்டுவிட்டதால் பருவமழை தவற ஆரம்பித்துவிட்டது. நம் நாட்டிலுள்ள தார், சஹாரா போன்ற பாலைவனங்கள் காடுகள் அழிந்ததால் ஏற்பட்டவைஎன்று கருதப்படுகின்றது. காடுகள் பொதுவாக இரண்டுவிதப் பணிகளைச் செய்து வருகின்றன. நமக்குத் தேவையான பல அத்தியாவசியமான பொருட்களைக் கொடுத்து வருகின்றன. நாம் ஆரோக்கியமான வாழ நமது சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாத்து வருகின்றன.

**காடின்றி எதுவுமில்லை:**

காடு இல்லாமல் மனிதனுக்கு எதுவும் ஆவதில்லை அவை நமக்கு மரம், மரச் சாராயம், பலவித பிசின்கள் ஆகியவை தருகின்றன. காட்டு மரங்களிலிருந்தே நாம் காகிதங்களையும் செயற்கைப் பட்டுகளையும் உருவாக்குகிறோம்.

**அன்றும் இன்றும்:**

முற்காலத்தில் மனிதன் காடுகளை நாசப்படுத்தியதோடு அழித்தும் வந்தான். காடுகள் இவ்வாறு அழிந்துவிட்டதால் மரங்களும் ஏனைய பயனுக்குரிய பொருட்களும் கிடைக்காமல் போனது மட்டுமல்ல நாட்டின் தட்ப வெப்ப நிலை மாறியதோடு அதன் தன்மையே மாறுவதாயிற்று. காடுகள் மறைந்த இடங்களிலெல்லாம் பாலைவனங்கள் தோன்றலாயின.

**காடுகள் தரும் பொருட்கள்**

உபயோகப்படுத்தப்படும் எரிபொருள் சக்தி பலவற்றில் நகர்ப்புறத்தில் 50 சதமும், கிராமப்புறத்தில் 70 சதமும் பயன்படுத்தப்படுகிறது. இந்த விறகில் பெரும்பகுதி விறகு காடுகளிலிருந்தே வருகிறது.

நம் நாட்டிலுள்ள சுமார் 4 கோடி ஆதிவாசிகளில் பாதிப்பேர் தங்கள் உணவுக்காக காடுகளையே நம்பியுள்ளனர். இலுப்பை போன்ற சுமார் 100 வகை மரங்கள் இவர்களது உணவுத் தேவையை ஏதேனும் ஒரு வடிவத்தில் பூர்த்தி செய்து வருகின்றன.

நமது நாட்டிலுள்ள கால்நடைகளில் ஏறத்தாழ ஆறில் ஒரு பங்கு விலங்குகள் தீவனத்திற்குக் காடுகளையே முழுவதும் நம்பியுள்ளன.

காகிதம், ரப்பர், தீக்குச்சி, விளையாட்டுக் கருவிகள், பொம்மைகள் போன்றவை தயாரிக்கும் தொழிற்சாலைகள் தங்கள் மூலப்பொருட்களுக்குக் காடுகளையே நம்பியுள்ளன.
பஞ்சு (இலவம் மரம்), வாசனை எண்ணெய்கள் (சந்தன மரம்), தைல எண்ணெய், சோப்பு தயாரிக்க உதவும் எண்ணெய்கள் (வேம்பு, புங்கம் மற்றும் இலுப்பை), தோல்பதனிட உதவும் டானின், கோந்து, பீடி இலைகள் போன்ற பல உபயோகமான பொருட்களையும் காடுகள் தருகின்றன.

**காடுகளின் பயன்:**

காடுகள் நீர் வளத்தைப் பாதுகாக்கின்றன. மலைகளிலுள்ள அடர்ந்த காடுகளில் மழை பெய்யும் போது, மரங்களின் இலைகளால அதன் வேகம் மட்டுப்படுத்தப்பட்டு நீர் வீழுவதால் அங்குள்ள வளமான மண் கரைந்து போவதில்லை. இழுத்துச் செல்லும் மண்ணை மலைச் சரிவிலுள்ள மர வேர்கள் தடை செய்து கொள்கின்றன.

மலைகளில் மரங்களே இல்லாதிருக்குமாயின், மழை வேகமாகப் பெய்து அங்குள்ள வளமான மண்ணை இழுத்துக் கொண்டு போய் விடுகிறது. குளிர்காலங்களில் மலையில் பெய்து உறையும் பனி வெறும் தரையில் விரைவில் உருகி விடும்.

காடுகளில் பெய்யும் பனி மெதுவாகவே உருகும். மேலும் இந்நீர் நிலங்களுக்கும், பண்ணைகளுக்கும், ஊற்றுக்களுக்கும் பூமியின் அடியிலுள்ள ஓடைகளுக்கும் மெதுவாகச் சென்று பரவுகிறது.

வேகமுடைய வெள்ளப் பெருக்கு மரங்களை வீழ்த்தி விடுகின்றது. வெற்றிடத்தில் விழும் மழை நீரும், உருகும் பனிநீரும் மெதுவாகச் செல்வதற்குப் பதிலாக துரித் கதியில் சென்று மறைந்து விடுகிறது.

வண்டல் மண்ணை வாய்க்கால், ஆறுகள், கடல் ஆகியவற்றுக்கு மழை நீர் இழுத்துச் செல்வதினின்றும் காடுகள் தடை செய்கின்றன மரங்களின் வேர்களும், கொப்புகளும் வண்டல் மண் போகாது தடுத்து விடுகின்றன.

**காடுகளை அழித்ததால்?:**

ஐரோப்பாவிலும் ஏனைய பல இடங்களிலும் மலையைக் கொண்ட பல மாவட்டங்கள் வெறுமையாகக் காட்சியளிப்பதுடன் பயனற்றும் உள்ளன. அதற்குக் காரணம் ஆண்டுக்கணக்காய் மரங்களை முறித்துக் காடுகளை அழித்ததால் அங்குள்ள வண்டல் மண் முழுவதும் நீரால் இழுத்துச் செல்லப்பட்டதே ஆகும். இப்போது அவ்விடங்களில் எதுவுமே பயிராவதில்லை.

**காடுகளைப் பாதுகாக்க:**

ஆண்டுதோறும் ஓடைகளும், ஆறுகளும் கடலுக்குக் கொண்டு செல்லும் வண்டல் மண் 200000,000 பவுன்களுக்கும் மேலான மதிப்புடையதென்று கணக்கிட்டுள்ளனர். துறைமுகங்கள், நதிக் கால்வாய்கள் போன்றவற்றிலிருந்து இம்மண்ணை மாற்றி அகற்றுவதற்கும் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்படுகின்றன.

**மேலை நாடுகளில்:**

இவ்வாறு பெரு மழை பெய்து வண்டல் கொண்டு செல்லப்பட்டு வெறுமையான நிலங்களில் பயிரேற்றுவதற்கு பெரும் தொகை செலவு செய்யப்படுகின்றது. இதனால் மக்களின் செல்வம் அழிந்து வருகின்றது.

இதனை உணர்ந்த சில மேல் நாட்டு மக்கள் இனியும் காடுகளை அழித்தால் மரங்கள், மரச்சாமான்கள, காகிதங்கள், கட்டடச் சாமான்கள் போன்வற்றை தயாரிக்க மரங்கள் கிடைக்காது என்ற காரணத்தினால் நன்கு வளர்ந்த மரங்களை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது. தேவைக்கு வெட்டினால், அந்த இடத்தில் அதற்கு இனையான செடிகளை வைத்து காடுகளாக வளர்க்கின்றனர்.

**முடிவுரை:**

இப்போது, பல்கலைக்கழங்களில் காடுகளைப்பற்றியும் அதன் பலன்களைப்பற்றியும் விழிப்புணர்வுப் பாடங்களை மக்கள் மத்தியில் எடுத்து வருகின்றனர்.

முடிந்தவரை நாமும் மரங்களை காப்போம், நம் அன்னை பூமியை காப்போம்.

## கட்டுரை - 5

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

| குறிப்புச் சட்டம் |
| --- |
| முன்னுரை<br>சுற்றுச்சூழல்<br>அன்றைய நிலை<br>இன்றைய நிலை<br>நில, நீர்,ஒலி மாசு:<br>பசுமை இல்ல விளைவு:<br>வானிலை:<br>கடல் மட்டம் அதிகரித்தல்:<br>நிகழவேண்டிய மாற்றம்:<br>முடிவுரை: |
| |

www.kalatamil.com

**முன்னுரை:**

சுற்றுசூழல் என்பது சுற்றுப்புறத்தை சூழ்ந்துள்ள இயற்கை சூழலின் சிறப்பை குறிக்கிறது. சுற்றுசூழல் என்ற சொல்லை சமூக பொருளாதார சூழல் என்ற சொற்களுடன் ஒப்பிட்டு வேறுபாடு அறிந்து கொள்ளலாம். பல சமயங்களில் சூழல் என்ற சொல் இயற்கை சுற்றுசூழலையே சுட்டிக்காட்டும். சுற்றுசூழலை சூழ்மை என்றும் சொல்லலாம்.

**சுற்றுச்சூழல்:**

நம்மைச் சுற்றியுள்ள உயிருள்ள, உயிரற்றப் பொருள்களின் தொகுப்பை தான் சுற்றுச்சூழல் என்கிறோம். பெருகி வரும் விஞ்ஞான வளர்ச்சியால் விளைந்த நன்மைகளையும் தீமைகளையும் ஆராய்ந்து பார்த்தால் நன்மைகளைக் காட்டிலும் தீமைகளே அதிகம் இருக்கின்றன.

**அன்றைய நிலை :**

பண்டைக்காலத்தில் ஒவ்வொரு மனிதனும் நிறைந்த முழுமையான உணர்வைப் பெற்றிருந்தான். அவனிடம் தொலைநோக்குப் பார்வை, தன்னலமற்றத் தன்மை நிறைந்து தென்பட்டது. அதன் விளைவாய் நல்ல சூழ்நிலையை உருவாக்கி அவர்கள் அமைதியான அர்த்தமுள்ள வாழ்க்கையினை வாழ்ந்து காட்டினார்கள்.

**இன்றைய நிலை :**

இன்றைய நிலையில் மெய்ஞானம் விஞ்ஞானம் தலைதூக்கி நிற்கிறது. கேள்விகளே அறிவின் விழிப்புநிலை என்ற எண்ணத்தின் அடிப்படையில் அமைதி காணாமல் போயிற்று. வெற்று ஆரவாரங்கள் தலை தூக்கியது. பொதுநலமற்ற தொலைநோக்குப் பார்வையற்ற சுயநலச் சமுதாயம் வேரூன்றி நிற்கிறது. அதன் விளைவாய் விளைந்ததுதான் இருபதாம் நூற்றாண்டு.

**நில மாசு :**

நில உயிரினங்கள் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. நிலத்தில் கலக்கும் ஆலைக் கழிவுகளும், அணு கழிவுகளும், செயற்கை உரங்களும், பிற நச்சுப் பொருட்களும் நிலத்தின் தன்மையை மாற்றி விடுகின்றன.
இதன் மூலம் பூமியுடன் தொடர்பு கொள்ளும் உயிரினங்கள் அனைத்தும் பாதிக்கப்படுகின்றன. நிலத்தில் விளையும் காய்கறிகளில் இந்த நச்சுத் தன்மை படர்வதால் மனிதனின் உடலிலும் கலந்துவிடுகிறது. குழந்தைக்கு ஊட்டப்படும் தாய்ப்பாலில் கூட இந்த காய்கறிகளின் நச்சு கலந்திருப்பதாக மருத்துவ ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

**நீர் மாசு :**

தண்ணீரை மாசுபடுத்துவது என்பது நிலத்தடி நீரை மாசுபடச் செய்யும். தேங்கி நிற்கும் தண்ணீருக்கு சரியான வடிகால் வசதிகள் இல்லாமல் போவதால் தண்ணீர் மாசுபடுகிறது. உலக அளவில் உள்ள தண்ணீரில் **0.01** விழுக்காடு மட்டுமே நாம் பயன்படுத்தும் குடிநீர் ஆகும். அந்த தண்ணீரும் தற்போது குறைந்தும், மாசுபட்டும் வருவது உயிரினத்துக்கே கேடு விளைவிக்க கூடியதாகும்.
வீட்டுக் கழிவுகள், ஆலைக் கழிவுகள் என கழிவுகளை இரண்டாகப் பிரிக்கலாம். இதில் ஆலைக் கழிவுகள் பெரும்பாலும் நச்சுத்தன்மை உடையதாக இருக்கின்றது. மனித அலட்சியங்களினால் அசட்டை செய்யப்படும் கழிவுகள் ஏதோ ஒரு வகையில் மனிதனையே

சென்றடைகிறது. கடலில் கொட்டப்படும் கழிவுகள் மீன்களின் வாயிலாகவோ, தரையை சேதப்படுத்தும் கழிவுகள் தானியங்களாகவோ, நீராகவோ காற்றில் கலக்கும் நச்சுகள் சுவாசம் வழியாகவோ ஏதோ ஒரு விதத்தில் மனிதனைச் சரணடைகின்றன.

**ஒலி மாசு :**

ஒலி மாசு என்பது மனதிற்கு ஒவ்வாத இயந்திரங்கள் பிறப்பிக்கும் இரைச்சல் அல்லது ஓலியாகும், அது மனிதனின் வாழ்க்கை முறைகளையும், விலங்குகளின் வாழ்க்கை முறைகளையும், அவர்களின் செயல்பாடுகளையும் வெகுவாக பாதிக்கின்றது. பொதுவாக போக்குவரத்து நம்மை இக்காலத்தில் வெகுவாக பாதிக்கும் ஓலி மாசு குறிப்பாக தானுந்து, பேருந்து போன்ற மோட்டார் வாகனங்கள் ஆகும். அலுவலகங்களில் பயன்படும் கருவிகள், வாகனங்களின் ஹாரன் ஓசை, ஆலை இயந்திரங்கள், கட்டிட பணிகள், ஒளிபரப்பு கருவிகள், தரையை சுத்தம் செய்யும் இயந்திரங்கள், கருவிகள், மின் விசைகள், ஒலிபெருக்கி, மின்சார விளக்குகள் எழுப்பும் ஒலி, குரைக்கும் நாய்கள், ஆடல் பாடலுக்கான பொழுதுபோக்கு சாதனங்கள், மேலும் சத்தம் போட்டு பேசும் மனிதர்கள், ஆகியவை அனைத்தும் வீட்டின் உள்ளும், வீட்டின் வெளியேயும் இரைச்சல் உண்டாவதற்கான காரணிகள் ஆகும்.

**பசுமை இல்ல விளைவு :**

பூமி, சூரியனிடமிருந்து ஆற்றலைப் பெறுகிறது. இது பூமியின் நிலப்பரப்பை வெப்பமாக்குகிறது. இந்த ஆற்றல் வாயு மண்டலத்தில் கடந்து செல்லும் போது, இதன் ஒரு குறிப்பிட்ட அளவு சிதறி போகிறது. பூமியிலிருந்தும், கடல் பரப்பிலிருந்தும் இந்த ஆற்றலின் ஒரு பகுதி, வாயு மண்டலத்திற்குள் பிரதிபலிக்கப்படுகிறது.
வாயுமண்டலத்தில் இருக்கும் சில குறிப்பிட்ட வாயுக்கள் பூமியைச் சுற்றி ஒரு விதமான போர்வை போர்த்தியது போன்று பரவியுள்ளன. அவையாவன, கார்பன்-டை- ஆக்ஸைடு, மீத்தேன் மற்றும் நைட்ரஸ் ஆக்ஸைடு. இவைதான் பசுமை இல்ல வாயுக்கள் (கிரீன் - ஹவுஸ் வாயுக்கள்) என்று அழைக்கப்படுகின்றன. பசுமை இல்ல (கிரீன்- ஹவுஸ்) வாயுக்கள், நீராவியுடன் சேர்ந்து வாயு மண்டலத்தில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளன. இவை வாயு மண்டலத்தில் பிரதிபலிக்கப்படுகிற ஆற்றலிருந்து சிறிதளவைக் கிரகித்துக்கொள்கிறது.

**வானிலை :**

உயர்ந்து வரும் வெப்பநிலை, மழை பெய்யும் நிலவரங்களை மாற்றக்கூடியது. வறட்சி மற்றும் வெள்ளம் ஏற்படுதலை அதிகரிக்கச் செய்கிறது. பனிப்பாறைகள் மற்றும் துருவப் பனிப்படிவங்கள் உருகுவது அதிகரிப்பதால், கடல் மட்டம் அதிகரிக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வரும் புயல், சூறாவளி போன்றவற்றுக்கும் வெப்பநிலை மாற்றங்களின் விளைவுகளே காரணம்.

**கடல் மட்டம் அதிகரித்தல் :**

கடல்நீர் வெப்பமடைதல், பனிப்பாறைகள் மற்றும் போலார் பனி படிவுகள் உருகுதளால், அடுத்த நூற்றாண்டுக்குள் சுமார் அரை மீட்டர் அளவுக்கு கடல் மட்டம் உயரப்போகிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது. கடல் மட்டம் உயர்வதால், மணல் அரிப்பு ஏற்பட்டு நிலப்பகுதிகள் கடலில் மூழ்குதல், வெள்ளப் பெருக்கு ஏற்படுவது அதிகரிப்பது, நீர்நிலைகள் உவர்ப்பாக மாறுதல் போன்ற பாதிப்புகள் ஏற்படும். ஓசோன் படலம் : துருவப் பகுயில் வானில் விழுந்துள்ள ஓசோன் ஓட்டை இன்னொரு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறது.
காற்றில் ஏற்படும் மாசு (குளோரோபுள+ரோகார்பன்) இதன் முக்கிய காரணியாக விளங்கும் அதே நேரத்தில் குளிர்சாதனப் பெட்டி, தானியங்கி விற்பனை இயந்திரங்கள் போன்றவற்றிலிருந்து வெளியாகும் வாயுவும் இந்த ஓசோன் ஓட்டைக்கு குறிப்பிடத்தக்க காரணமாக விளங்குகிறது. புற ஊதாக் கதிர்களின் தாக்கத்திலிருந்து பூமியைப் பாதுகாக்கும் ஓசோன் படலம் வலுவிழப்பதால் தோல் புற்று நோய் உட்பட பல்வேறு நோய்கள் மனிதனுக்கு வருகின்றன. கடலின் மேற்பரப்பில் வாழும் மீன்கள் அழிகின்றன.

**நிகழவேண்டிய மாற்றம் :**

நாம் இந்த உலகை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். ஐம்பெரும் பூதங்களுக்கும் கேடு விளையாத வண்ணம் நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். மனித இனத்தின் அறிவின் முதிர்ச்சியால் தாவரங்கள், பறவைகள், விலங்குகள், இயற்கையின் செல்வமாகிய காடுகள், ஆறுகள், அருவிகள், மலைகள் இவையாவற்றின் நலன் குறையலாம். நாம் இயற்கையைப் பாதுகாத்தால், நம்மையும் இயற்கை பாதுகாக்கும்.

**முடிவுரை :**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு என்பது வேறுபாடுகளற்று மனிதகுலம் முன்னெடுத்துச் செய்ய வேண்டிய மிகவும் முக்கியமான ஒன்றாகும். இவற்றை தவறவிடும் ஒவ்வொரு தருணங்களிலும் பூமியின் ஆயுளைக் குறைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அனைவரும் உணரவேண்டும். அன்றாடம் நிகழ்த்தும் சிறு சிறு செயல்களின் மூலம் நமது சுற்றுப்புறத்தைக் காக்கும் கடமை நம் அனைவருக்கும் உண்டு.

# ஒழுக்கம்

குறிப்புச் சட்டகம்

முன்னுரை
ஒழுக்கம்
ஒழுக்கம் மேம்பட
ஒழுக்கத்தின் பயன்
ஒழுக்கமே உயிரின் அமுதம்
நீதி நூல்கள்
முடிவுரை

**முன்னுரை**

ஒழுகுதல் என்பது ஒழுக்கம் என்று பாராட்டப்படுகிறது. அதாவது ஒருவருடைய வாழ்க்கை நடைமுறைகள் ஒழுக்கம் என்று தீர்மானிக்கப்படும். ஒருவர் தனக்கும் தன்னைச் சுற்றி வாழும் மற்றவர்களுக்கும் தீமைகள் வராமல் வாழ்வது ஒழுக்கமுடைய வாழ்வாகும். இப்பிறப்பு மிகப்பெரிய சிறப்பான ஒன்று. இதற்கு இணையானது எதுவும் இல்லை. இதுவும் ஒரே ஒரு தடவைதான். அதுபோல ஒழுக்கமும் இதற்கு நிகரான ஒன்று. ஒருமுறை ஒழுக்கம் தவறினால் நாம் பிறந்த பிறப்பிற்கு பயன் எதுவுமில்லை. இந்தப் பிறப்பை ஒழுக்கமான முறையில் வாழ்ந்து, வாழ்க்கையின் பயனை அடைய வேண்டும்.

“ஒளி” என்பதை இனம் காண்பதற்கு “இருள்” தேவைப்படுகிறது. இது வாழ்வியலுக்கும் பொருள் கற்பிக்கின்றது. ஒளியானது இறுமாப்பு அடைவதைத் தவிர்க்கவும், இருள் குறுகிப் போவதைத் தவிர்க்கவும், சமநிலையான ஓர் எதிர்பார்ப்பு இருப்பதுபோல், சமூக உயிர்களுக்கு நல்லனவும், தீயனவும் அறியப்படுவதற்கு மனிதர்களிடத்தில் ஒழுக்கம் இன்றியமையாத தேவையாகிறது. அதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**ஒழுக்கம்**

‘ஒழுகு’ என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். ‘ஒழுகு’ என்றால் ஒன்றை இடைவிடாது கடைபிடித்தலாகும். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல - சிறந்த - உயர்ந்த நெறிகளை எந்த நேரத்திலும் விட்டு விடாமல் கடைப்பிடிப்பதாகும்.

ஒழுக்கம் என்பது ஒரு மரபு சார்ந்தது. ஒழுக்கம் என்பது நீதி, சமூகம், பண்பு, கலாச்சாரம் ஆகியவற்றைக் கொண்ட சமுதாயம் விரும்பி ஏற்றுக்கொண்ட

ஒரு குணம். ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கிட அவரவர் தனது ஒழுக்கத்தின்பால் சிறந்தவராக இருத்தல் அவசியமானது.

ஒருவர் புதியதாக ஒன்றைக் கற்றுக் கொள்வதற்காகத் திறந்த மனதுடன் இருப்பாரேயானால் அதன் பெயர் தான் ஒழுக்கம். கற்றுக் கொள்வதன் அம்சமே ஒழுக்கம். நல்லொழுக்கம்

**ஒழுக்கம் மேம்பட**

வருங்கால தூண்களாக வரவேண்டியவர்கள் இன்றைய மாணவர்கள்.
நல்லொழுக்கம் ஒவ்வொருவரிடமும் எப்படி உதிக்கும். இதை மூவரால் மட்டுமே முடியும். அவர்கள் மாதா, பிதா, குரு. ஆரம்பப் பள்ளி ஆசிரியர் தான் ஒழுக்கத்தை கற்பிப்பதில் முதன்மையானவர். பள்ளிகளில் ஒழுக்கத்தை உருவாக்குவதில் ஆசிரியர் முக்கிய இடம் பெறுகிறார். தான் ஒரு முன் உதாரணமாகத் திகழ வேண்டும். மாணவர்களின் மத்தியில் ஆசிரியர்களின் நடவடிக்கை, செயல்பாடுகள் அனைத்தும் நம்பிக்கை ஏற்படுத்தும் நிலையில் இருக்க வேண்டும். அறிவுசார், உளம் சார், உடல்சார் செயல்பாடுகள் பள்ளிகளில் மாணவர்களின் ஒழுக்கம் மேம்பட உதவ வேண்டும். பள்ளிகளில் ஒழுக்கத்தை மாணவர்கள் கற்றுக் கொள்வதால், குடும்பம் மற்றும் சமுதாயத்தில் மாணவர்களின் செயல்பாடுகள் போற்றும் வகையில் மேம்படும்.

**ஒழுக்கத்தின் பயன்**

ஒழுக்கத்தின் அங்கமாக அன்பு, அருள், இரக்கம், கருணை, பண்பு, பாசம், பொறை, தியாகம், தொண்டு முதலியன உள்ளன. இவற்றைப் பின்பற்றி வாழ்கின்றவர்கள் சிறந்த ஒழுக்க சீலர்களாக உலகில் வலம் வருவர். ஒழுக்கமானது சிந்தனையில் உயர்வைக் கொடுக்கும், உறவை வளர்க்கும், அன்பைப் பெருக்கும், அமைதியைக் கொடுக்கும். ஒழுக்கம் நம்மை சாதனை புரியத் தூண்டும், மனப்பான்மையை வளர்க்கும். தங்களை உலகிற்கு அடையாளம் காட்டும். உங்களின் சொல்லானது விலை மதிப்புள்ளதாக கருதப்படும். நல்ல நிலையான புகழை நிலை நாட்டும். எல்லோருக்கும் முன் உதாரணமாக உங்களது ஒழுக்கம் திகழும். உங்களை மாற்றும் மனம் தெளிவாக இருக்கும். துணிவுடன் எதையும் செய்ய முடியும். வாழ்க்கை கடினமாக இருந்தாலும் நம்மிடம் நிம்மதியான மனநிறைவும், அமைதியும் நிலையாக நிலைத்திருக்கும்.

**ஒழுக்கமே உயிரின் அமுதம்?:**

ஒழுக்க நிலையில் தற்சார்பான ஒழுக்கம் முதன்மையானது, அதாவது ஒரு மனிதன் தன்னைத்தான் கொண்டு வாழ்தால். தன்னுடைய ஐம்புலன்களையும் மனதில் கட்டுக்கோப்புடன் வைத்துக் கொள்ளல். உலகின் எல்லாதவித நோய், தீமை, துன்பத்திற்கு அடிப்படைக் காரணம் ஒழுக்கமில்லாத இழிவுத் தன்மையே. ஒழுக்கத்துடன் வாழ்பவர்கள் என்றும் நலமுடன், வெற்றிகளுடன், பலருக்குப் பயன்படும்படி வாழ்வர். வாழ்க்கையின் பெரும்பகுதி ஒழுக்கத்தால் நிறைந்திருக்கும். வாழ்க்கைப் பயணத்தின் நெடிய வரலாறு ஒழுக்கத்தாலேயே எழுதப்படுகிறது.

ஒழுக்கத்தோடு வாழும் மனிதர்களே உலகில் வாழும், உண்மையான தெய்வங்கள். ஒழுக்கம் மிக்கோரை பணிந்து வணங்குவதில் தவறில்லை.

ஒழுக்கத்திற்கு உயிரை விடுபவர்கள் சான்றோர் பெருமக்கள். ஒழுக்க சீலர்களை உலகம் போற்றி மகிழும். ஒழுக்கமே உயிரின் அமுதம்.

**நீதி நூல்கள்:**

நீதி நெறிகளை நமக்கு வலியுறுத்தும் நோக்குடன் நம் சான்றோர்கள் இயற்றிய நீதிநூல்கள் பல நீதிக்கருத்துகளை எளிய நடையில் நமக்கு எடுத்துரைப்பதாக உள்ளன. அவைகளில் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், திருக்குறள், நாலடியார், திரிகடுகம், சிறுபஞ்ச மூலம், பழமொழி முதலிய நூல்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் முத்திரை பதித்தவை ஆகும். இவற்றில் திருக்குறள், உலகளவில் தமிழர்களின் ஒழுக்க நெறிகளை பறைசாற்றும் ஒப்பில்லா நூலாக புகழப்படுகிறது. அதனால்தான் அதை ‘உலக பொதுமறை’ என போற்று கிறார்கள். உலக மொழிகள் பலவற்றில் மொழிப்பெயர்க்கப்பட்டு பயிலப்படுகிறது.

‘ஒழுக்கம் விழுப்பம் தரும்’ என்பது குறள் நெறி. விழுப்பம் என்றால் உயர்வு என்று பொருள். ஒழுக்கம் வாழ்வில் உயர்வைத் தருவதால் ஒழுக்கத்தை உயிரினும் பெரியதாய் மதித்துப் போற்ற வேண்டும் என்று வள்ளுவர் குறளின் வழியே வலியுறுத்துகிறார். ஒருவர் தம் வாழ்வில் நன்மை அடைய வேண்டுமென்றால் நல் ஒழுக்கத்தை கடைப்பிடித்து வாழ்தல் அவசியமானது. இக்கருத்தையே வள்ளுவர் “நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்” என்று விளக்குகிறார். நல்லொழுக்கத்தோடு கூடிய உயர்வே நிலைக்கும், தழைக்கும்.

**முடிவுரை**

மாணவர்கள் திரைப்படம், தொலைக்காட்சி போன்ற புறக் கவர்ச்சிகளில் அடிமையாகி நம் வாழ்வை வீணடிக்காமல் உயிரினும் மேலான ஒழுக்கத்தையும், அறிவூட்டும் கல்வியையும் செம்மையாக்கி கற்று, கற்ற நல்நெறிகளை வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தால் சிறக்கலாம். நெறி தவறாமல் வாழ்ந்து சிறப்போம்! நாட்டின் பெருமை காப்போம்!
குடும்பம் தழைக்க, நாடு செழிக்க, நல்ல ஒழுக்கமான கருத்தை விதைக்க வேண்டும். ஒழுக்கமற்ற களைகளைப் பிடுங்கி எறிய வேண்டும்..

ஒழுக்கம் இருந்தால் கல்வி தானாக வரும். ஒழுக்கமும், கல்வியும் இருந்தால் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறலாம்!

## கட்டுரை - 7

## முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை<br>முயற்சி அவசியம்<br>முயற்சி திருவினையாக்கும்<br>முயற்சியில் வென்றவர்கள்<br>இயற்கை கூறும் முயற்சி<br>தோல்வி நிரந்தரமல்ல<br>முடிவுரை |

www.kalatamil.com

**முன்னுரை:**

தளர்ச்சி இல்லா முயற்சியே ஒரு பயிற்சி முயன்றால் முடியாதது இந்த உலகில் இல்லை. விடமுயற்சி வெற்றிக்கு வித்திடும். வாழ்வில் சுவை கூட்டுவது இந்த முயற்சிதான். வாழ்கை வாழ்வதும் ஒரு முயற்சிதான். பூமி சுழலுவதும் இந்த முயற்சியில்தான். தோல்விகளை வெல்ல முயற்சி என்னும் ஆயுதம் வேண்டும். நம் செயலில் முயற்சியிருந்தால் தோல்விகள் நம்மை அண்டாது.

மக்களின் முயற்சியே நாட்டின் வளர்ச்சி!
முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் - பழமொழி.
முயற்சி உடையோர் புகழ்ச்சி அடைவர் - புதுமொழி.

**முயற்சி அவசியம்:**

முயற்சிக்கு உதாரண புருஷர்கள் சரித்திரத்தில் நிறைய உள்ளார்கள். அவரவர் செயலில் முயன்று வென்றதால்தான் அவர்கள் சரித்திரத்தில்

இடம் பிடித்தார்கள். எறும்பின் உழைப்பில் முயற்சி இருக்கிறது. ' தெய்வத்தால் ஆகதெனினும் முயற்சி தன் மெய் வருத்த கூலிதரும் ' வள்ளுவன் வாக்கு. குறளின் குரல். நம் திட்டமிட்ட முயற்சி நாம் வேண்டியவற்றையும் வேண்டியதிற்கு மேலும் அள்ளித் தரும். முயற்சி இல்லாமல் தெரு கற்களாய் நின்று கொண்டு, விழலுக்கு இறைத்த நீராய் வேலை பார்த்துக் கொண்டு, ஆடைகடைகளில் அழகு மெழுகு பொம்மைகளாய் நின்று கொண்டு, உள்ளத்தை பூட்டி உடல் உழைக்காமல் உட்கார்ந்து உண்டு வாழ்பவர் எல்லாருக்கும் முயற்சி என்ற நான்கெழுத்து அவசியம் தேவை.

**முயற்சி திருவினையாக்கும்**
முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்று சொல்வார்கள். நம்மால் இது நிச்சயம் முடியாது என்று எண்ணும் கடினமான காரியங்களைக்கூட திரும்பத் திரும்ப விடாமுயற்சியுடன் செய்தால் கட்டாயம் வெற்றி அடைய முடியும். அது நமக்கு மேலும் நம்பிக்கையை ஊட்டும்.

**முயற்சியில் வென்றவர்கள்:**
ரால்ப் எமர்சன், "எந்தச் செயலைச் செய்வதற்கு விடாமுயற்சி எடுக்கிறோமோ அதனை சாதிக்க முடிகிறது; சாதிக்கிறபோது அந்தச் செயல் ஒன்றும் எளிமையாகி விடவில்லை; நமது முயற்சி அதனை செய்து முடிக்க எளிதாக்குகிறது" என்கிறார்.

தாமஸ் ஆல்வா எடிசன் சொல்கிறார், "ஒரு தோல்வி ஏற்பட்டால் மேலே முயற்சி செய்யாமல் இருப்பதுதான் நமது பலவீனமே. இன்னுமொருமுறை முயற்சி செய்து பார்ப்போமே எனும் எண்ணம்தான் வெற்றிக்கு நிச்சயமானவை" என்று.

936ல் தியோடர் சேயஸ் கீசல் எனும் நாவலாசிரியர் ஐரோப்பாவிற்குக் கப்பலில் பயணித்துக் கொண்டிருந்தார். அப்போது கப்பல் எஞ்சின் சத்தத்தின் தாளகதி அவரை ஒரு பாடலை எழுதத் தூண்டியது. அதை அடிப்படையாக வைத்து ஒரு நாவலை எழுதினார். அந்த நாவல் பதிப்பாளர்களால் 27 முறை ஏற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்டது. பலர் இரண்டு மூன்று முறை தோல்வி கிடைத்தபின் இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று விட்டு விடுவார்கள். ஆனால் 27 முறை தோல்விக்குப் பிறகு அவரது நண்பர் ஒருவர் அவருக்காக அந்த நாவலைப் புத்தகமாக வெளியிட்டார்; வெற்றியும் அடைந்தார். எழுதிய டாக்டர் சேயஸ் 1991ம் ஆண்டு இறந்தார். அதற்குள் அவரது புத்தகம் 200 மில்லியன் பிரதிகள் 15 மொழிகளில் விற்றிருந்தன. அவரது இறப்பிற்குப் பிறகு மேலும் 22 மில்லியன் பிரதிகள் விற்றன.

நம் நாட்டின் நோபல் பரிசாளர் தாகூரின் ஆரம்ப காலத்துக் கவிதைகளை வங்கமொழி அறிஞர்கள் பிழைதிருத்தத்திற்கு எடுத்துக் கொடுப்பார்கள். அவ்வளவு அவமானப்பட்டவர்தான் தாகூர். அவரது மேதாவிலாசத்தை விடவும் அவரது விடாமுயற்சியே அவருக்கு நோபல் பரிசைக் கொண்டுவந்து கொடுத்தது.

வெற்றிக்கான பாதையாக எடிசன் கூறுவது : "தேவையானது ஒரு சதவிகிதம் ஊக்கம் – 99 சதவிகிதம் விடாமுயற்சி"

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கூலிடிஸ் சொல்கிறார், "இந்த உலகில் முயற்சியை விட வேறொன்றும் சிறந்த இடத்தைப் பெற்றுவிட முடியாது. திறமை, மேதைத்தனம், கல்வி இவ்வளவு இருந்தாலும் அதனுடன் விடாமுயற்சியும், எதை அடையவேண்டும் என்ற தெளிவான முடிவும் மட்டுமே வெற்றிக்கு வழிகாட்டும் சர்வ வல்லமை படைத்தது" என்று.

நம்ம ஊர் வள்ளுவரும் இதைத்தானே சொல்கிறார், "முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்" என்று!

**இயற்கை கூறும் முயற்சி:**

"அமைதியான கடல் ஒருபோதும் சிறந்த மாலுமியை உண்டாக்காது" என ஆங்கிலப்பழமொழி ஒன்று உண்டு.

கடலை நோக்கி மலை சொல்லியது. "நான் உன்னைவிட பலசாலி. என்னை யாரும் அழிக்க முடியாது" என்று. ஆனால், பல ஆயிரம் ஆண்டுகளில் கடலின் அலைகளால் மலை மறைந்தது; கடல் அலைகள் தொடர்ந்தன.

ஓர் எறும்புக்கு முன்னால் எந்தத் தடைகளை நீங்கள் வைத்தாலும் அது அடியில்சென்றோ அல்லது மேலால் சென்றோ, அல்லது சுற்றிச் சென்றோ தடைகளை கடக்கும்.

எல்லாக் கஷ்டங்களிலும் எறும்பு தன்னால் முடிந்த எல்லாவற்றையுமே செய்துபார்க்கிறது. வெல்பவர்கள் தளர்வதில்லை ! தளர்பவர்கள் வெல்வதில்லை ! என்றகொள்கைக்கு அது ஆதாரமாக இருக்கிறது.

கோடை காலத்தில் தனக்கு வேண்டிய உணவை சேகரித்து வைத்துவிட்டு குளிர் காலத்தில் கோடைக்காக பொறுமையுடன் காத்திருக்கிறது எறும்பு உழைப்பாளி மட்டுமல்ல சிறந்த பொறுமைசாலியும் கூட.

**தோல்வி நிரந்தரமல்ல:**

ஓரிரு முறை தோல்வியை சந்தித்துவிட்டால் பின் துவண்டுவிடாதே! தோல்வி நிரந்தரம் அல்ல, தோல்வியுற்றால் அதில் உள்ள தவறை ஒத்துக்கொண்டு அதிலிருந்து மீண்டு முன்னேறு...! ஆனால் ஒருபோதும் முயற்சி செய்ய மறக்காதே...!" இதனை மறவாமல் இருந்தாலே வெற்றி நம் காலடியில் சரணடையும்.

சிந்தனையாளர் சிவ்கேரா கூறுகையில், ஒரு நிலத்தில் உள்ள களைகளை எடுப்பதற்கு இரண்டு வழிகள் உள்ளன. எளிய முறை, சற்று கடினமான முறை. எளிய முறையில், களைகளை பிடுங்கும் எந்திரம் மூலம் அவற்றை அகற்றலாம். அவ்வாறு செய்யும் போது, களைகளுடன் பயிரும் அகற்றப்படும்.

மீண்டும் களைகள் முளைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். கடினமான முறையில், நிலத்தில் உங்கள் முழங்காலை வைத்து ஒவ்வொரு

களையையும் அதனுடைய வேருடன் பிடுங்க வேண்டும். அதனால் களைகள் முளைக்கும் வாய்ப்புகள் மிக குறைவு. நிலத்தில் உள்ள பயிர்கள் பாழாவதை தடுக்கலாம். இவற்றில் எந்த முறையை நீங்கள் தேர்வு செய்வீர்கள்&' என்பார். ஆகவே உங்களுடைய எண்ணம், கடின முயற்சியை பொறுத்தே பலன் கிடைக்கும்.

**முடிவுரை:**

தடை கற்களை படிகற்களாக மாற்றுவதும் இந்த முயற்சியே. வாய்ச் சொல்லாக முயற்சியை உச்சரிப்பதை விடுத்து. நம் செயலில் பிரதிபலிக்க வேண்டும். சுயமுயற்சி ஒருவரின் வெற்றிக்கும், கூட்டு முயற்சி அனைவரின் வெற்றிக்கும் வழிகோலும். முயற்சி இல்லாத ஒரு செயல் சிறகில்லாத பறவை உயர பறக்க நினைப்பதற்கு ஒப்பாகும். வாழ்கையில் நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் ஒவ்வொரு பாடத்தை கற்றுக்கொடுக்கிறது. முயற்சியுடன் நம்மை நமக்குள் தேடி நம் வாழ்வை வளமாக்குவோம்.

www.kalatamil.com